ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1895/42 - 2015 ජනවාරි මස 02 වැනි සිකුරාදා - 2015.01.02

*1895/42 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

**வட மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1939 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

வடமாகாணத்தின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்றுறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடையங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் என்ற வகையில் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1939 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம் ) 184 ஆம் பிரிவின் (1ஆ) (அ) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய வல்வெட்டித்துறை நகர சபையின் செயற்பாடுகளை ஆராய்ந்து பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்ற நீதிவான் திரு. கந்தையா அரியநாயகம் அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணைச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்ட பின்னர் நான் அது தொடர்பில் சுயாதீன தீர்மானங்களுக்கு வந்துள்ளேன்.

அதற்கமைய வல்வெட்டித்துறை நகர சபை செயற்படும்போது விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களால் சபையை இயங்கவிடாது வேண்டுமென்றே முடக்கும் செயற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதில் நான் திருப்தியடைகிறேன்.

அவ்வாறு திருப்தியடைந்ததன் பிற்பாடு 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1939 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 4(அ) (அ) பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வல்வெட்டித்துறை நகர சபை கலைக்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சரும்
நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி,
மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும்,
தொழிற்றுறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு,
சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக
விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும்,
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
இல. 26, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,
*2014, திசெம்பர் 31.*

*01 - 514*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.